**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.02/2013**
**Deposition of witness for prosecution –PW– 5 (LW 7)**

| | | |
|---|---|---|
| Name | : | போஸ் |
| F/H Name | : | வெள்ளைச்சாமி |
| Village | : | உத்தரவை |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | கிராம உதவியாளர் (ஓய்வு) |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 17th day of June 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கிராம உதவியாளராக பணி புரிந்து ஓய்வு பெற்று வருகிறேன். 30.07.2012 ம் தேதி பகல் 03.00 மணியை போல கீழக்கரை புது பஸ் ஸ்டாண்ட் அருகே என்னையும் கிராம நிர்வாக அலுவலர் தாகீர் அலி என்பவரையும் வழக்கு சம்பந்தமாக கீழக்கரை போலீசார் வரவழைத்தார்கள். அப்போது ஒருவரை பிடித்து வைத்திருந்தார்கள். அவர் ஆஜர் எதிரிதான். எதிரியை விசாரணை செய்த போது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தங்கத்தை ஒரு பேப்பரில் வைத்து எடுத்து கொடுத்தார் அதை கைப்பற்றி அத்தாட்சி ஒன்றை தயார் செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் **அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு கு.வி</u>**

இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றங்களில் நான் போலீசார் கேட்டுக்கொண்டு பல வழக்குகளில் சாட்சியம் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் தான் நான் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு கோப்புகளை போலீசார் என்னிடம்கொடுத்து படிக்க சொன்னார்கள் என்றாலும் நான் அதை படித்தேன் என்றாலும் சரிதான். நான் கையொபப்பங்களை எதற்காக எப்போது எங்கு வைத்து போட்டேன் என எனக்கு தெரியது என்றால் சரியல்ல, தெரியும். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் தான் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்டபோது அங்கு நானும் VAO வும் போலீசார்களும் இருந்தோம். அரசு அலுவலர்களை தவிர பொதுமக்கள் சாட்சிகள் யாரேனும் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி எடுத்து ஆஜர் செய்ததில் நகையும் பணமும் இருந்தது. அது என்னென்ன நகை என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நகையை எதிரி எடுத்து ஆஜர் செய்த பிறகு தான் ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தாரா என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று எதிரியை நான் இதற்கு முன்பாக பார்த்ததே இல்லை என்றாலும் எதிரி என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு கைப்பற்றப்பட்ட பொருட்கள் பற்றி விவரம் சரியாக தெரியவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எதுவும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.17 17:25:49 +0530